ஊடக அறிவித்தல் இல. 09

# தேர்தல் ஆணைக்குழு

இத்தருணத்தில் நாட்டில் நிலவும் ஸ்திரமற்ற சூழ்நிலையை தணித்துக்கொள்வதும் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிலையானதாக பெற்றுக்கொடுப்பதும் மிக முக்கிய பணியாக இருக்கின்றதென தேர்தல் ஆணைக்குழு கருதுகின்றது. வளர்ந்துவரும் இந்நிலையை உணர்ந்த தேர்தல் ஆணைக்குழு, அதன் கடமைகளை ஆரம்பித்தவுடன் மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் அதேபோல் அவர்களின் செயற்பாடு மக்களின் மேற்பார்வையின் கீழ் இடம்பெறக்கூடியவாறு மேற்குறித்த சட்டத் திருத்தங்களை மேற்கொள்வதற்கு பாராளுமன்றத் தெரிவுக் குழுவொன்றை நியமிக்குமாறு கோரியது. அத்தெரிவுக்குழு நியமிக்கப்பட்டதன் பின்பு ஏராளமான முன்மொழிவுகள் ஏற்கனவே அத்தெரிவுக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், அரசியல் கட்சிகளுக்குள்ள தனித்துவ அடையாளத்திற்கும் கொள்கைகளுக்கும் அவர்களுக்குள்ள உரிமைக்கும் மிக்குயர் மதிப்பைக் கொடுக்கும் தேர்தல் ஆணைக்குழு, இச்சந்தர்ப்பத்தை இப்பொருளாதார நெருக்கடியை வெற்றிகொள்வதற்கு, இணக்கப்பாட்டுடன் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு இணைந்து பணியாற்ற வேண்டிய ஒரு தருணமென்றும் கருதுகின்றது. இதன்போது பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து கட்சிப் பிரதிநிதிகளும் உள்ளடங்கும் ஓர் அமைச்சரவை அல்லது வேறேதேனுமொரு கட்டமைப்பினால் இடைக்கால குறித்துரைக்கப்பட்ட வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்பட வேண்டுமென்றும் தேர்தல் ஆணைக்குழு கருதுகின்றது. “வேலைத்திட்டத்தை” அமுல்படுத்துவதே மிகவும் முக்கியமானதாகும். அதற்காக பின்வரும் அம்சங்களுக்கு முக்கியத்துவமளிப்பதுடன் குறித்துரைக்கப்பட்ட ஒரு காலப்பகுதியினுள் அத்தகைய முன்மொழிவுகள் அமுலுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்றும் நம்புகிறது.

01. அரசியலமைப்பு (நிறைவேற்றுத்துறையை நீக்குதல் அல்லது தத்துவங்களை மட்டுப்படுத்துதல் அல்லது பாராளுமன்றத்தின் அதிகாரத்தைப் பலப்படுத்துதல் என்றவாறு) மற்றும் தற்போது பாதகமானதாகத் தோன்றும் ஏற்பாடுகளை நீக்கி விடுவதற்குப் பொருத்தமான இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளலும் குறித்துரைக்கப்பட்ட ஒரு காலப்பகுதியில் அதனை நிறைவேற்றிக்கொள்ளலும்.

02. (i) இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு உரிய தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதை நோக்காகக்கொண்ட, நாட்டுக்கு அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொள்வதை இலக்காகக்கொண்ட ஒரு வேலைத்திட்டத்துடன்கூடிய கருத்திட்ட அமைச்சுக்களையும் அத்தியாவசிய சேவைகளையும் வழங்குவதற்கான விசேட அமைச்சுக்களை உருவாக்குதல். ஏராளமான அமைச்சுக்களினாலும் நிறுவனங்களினாலும் நிறைவேற்றப்பட வேண்டிய ஏராளமான பணிகளை ஒரே இடத்திலிருந்து வினைத்திறனாக மேற்கொள்வதற்கு இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. அதற்குப் பொருத்தமான நிபுணத்துவ அறிவுள்ளவர்களை நியமித்துக்கொள்வது இன்றியமையாததாகும். (தற்போதைய அமைச்சுப் பதவிகளின் எண்ணிக்கையினுள் இதனை மேற்கொள்ள வேண்டும்.)

(ii) இன்றைய சமூகப் பிரச்சினைகளுக்கு உரிய ஒரு தீர்வாக மக்கள் வாழ்வை வழமை நிலைக்குக் கொண்டுவருவதற்கு அத்தியாவசியமான அடிப்படைப் பண்டங்களையும் சேவைகளையும் வழங்குவதற்கும் விநியோகிப்பதற்குமான முறைசார்ந்த ஒரு பொறிமுறையை நிறுவுதலும், மாவட்ட/பிரதேச செயலகங்கள் மற்றும் கிராம அலுவலர் பிரிவுகள் வரை அதனை ஒருங்கிணைப்புச் செய்தலும்.

03. மக்கள் பிரதிநிதிக்கு வழங்கப்படும் மிகு சிறப்புரிமைகளை (வாகன அனுமதிப் பத்திரங்கள், 05 வருடங்களில் ஓய்வூதியம் வழங்குதல், ஓய்வுபெற்ற பின்பு ஜனாதிபதி பதவிக்கு உரித்தாகும் மிகு சிறப்புரிமைகளை) மட்டுப்படுத்தல்.

04. தேர்தலொன்றுக்குச் செல்வதற்கு முன்பு இடைக்கால காலப்பகுதியில் தேர்தல் சட்டத்தில் பின்வரும் திருத்தங்களை மேற்கொள்ளல். (தேர்தல் ஆணைக்குழு தேர்தல் சட்டத் திருத்தங்களுக்கான பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு ஏற்கனவே ஏராளமான முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளதுடன், இடைக்கால காலப்பகுதியில் பின்வரும் முன்மொழிவுகளுக்கு முந்துரிமையளித்து அமுல்படுத்துவதற்கு அவசியமான சட்டத் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது.)

(அ) தேர்தல் நடவடிக்கைகளுக்கு அரசியல் கட்சிகள்/வேட்பாளர்கள் மேற்கொள்ளும் பாரிய அளவான செலவுகளை மட்டுப்படுத்தலும் தேர்தலொன்றைத் தொடர்ந்து குறித்த ஒரு திகதிக்கு முன்பு கணக்கறிக்கைகளைச் சமர்ப்பித்தலும் அவற்றைப் பகிரங்கப்படுத்தலும் அவற்றில் வழுக்கள் காணப்படுமாயின் உறுப்பினர் பதவியை வறிதாக்குதலும்.

(ஆ) ஒவ்வொரு தேர்தல் சட்டத்திலும் இளைஞர்கள் மற்றும் பெண்களின் பிரதிநிதித்துவத்தைப் பலப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை உட்படுத்துதல்.

(இ) தேர்தல் தினத்தன்று, அத்தியாவசிய சேவைகளில் ஈடுபட நேரிடும் சேவைகளைச் சேர்ந்த வாக்காளர்களுக்கு உரிய தேர்தல் தினத்திற்கு முன்பு முற்கூட்டியே வாக்களிக்கும் முறையொன்றை ஏற்படுத்துதல்.

(ஈ) வாக்களிப்பதற்கு வாக்கெடுப்பு நிலையத்திற்கு வர முடியாத நிலையில் உள்ளவர்களின் வாக்கை, அவர்களின் வீட்டுக்குச் சென்று அல்லது வேறு மாற்று முறையின் மூலம் பெற்றுக்கொள்வதற்கான வழிமுறைகளை ஏற்படுத்தல்.

(உ) இலத்திரனியல் வாக்கெடுப்பு முறையைப் பயன்படுத்தக்கூடியவாறான ஏற்பாடுகளை சட்டவாக்கப்படுத்துதல்.

05. அரச ஆதனங்களை சொந்தப் பாவனைக்கு எடுத்திருக்கும் பட்சத்தில் அல்லது மக்கள் பிரதிநிதிகள் அதிகாரத் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டிருக்கும் பட்சத்தில் பொது மக்களுக்கு எச்சந்தர்ப்பத்திலும் முறைப்பாடு செய்வதற்கான வாய்ப்பை அளித்தலும், அவ்வாறு செய்யப்படும் முறைப்பாடு குறித்து விசாரித்து சிபார்சுகளை முன்வைப்பதற்குப் பொருத்தமான (உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதிகள் அடங்கிய) நிலையான ஆணைக்குழுவொன்றை நிறுவுதலும், அதன் அடிப்படையில் குற்றம் நிரூபணமாகும் பட்சத்தில் அவர்களுக்கெதிராக தகுந்த சட்ட நடவடிக்கை எடுத்தலும், குறித்ததொரு காலத்திற்கு அவர்களின் குடியியல் உரிமையை இல்லாமல்செய்தல் வரை செயலாற்றுதலும். (இது மக்கள் பிரதிநிதிகளின் செயற்பாடுகள் தொடர்பில் மாத்திரம் ஏற்புடைத்தாகுமென்பதுடன், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்யும் ஆணைக்குழுவுக்கு மேலதிகமாக முன்மொழியப்படுவதுமாகும்.) (இது மீள அழைப்பதற்கான ஒரு முறையாகும்.)

06. தகுதியற்ற வேட்பாளர்கள் தொடர்பில் செயலாற்றக்கூடிய விதத்தில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு சட்ட ஏற்பாடுகளை வழங்குதல்.

07. அத்தியாவசியமற்ற கருமங்களுக்கு மேற்கொள்ளப்படும் செலவுகளைத் தவிர்ப்பதற்கான சட்டவாக்கங்களை மேற்கொள்ளலும், அரச சேவையை மீள்கட்டமைத்தலும்.

08. இந்த இடைக்கால காலப்பகுதியின் முடிவில் தேர்தலொன்றை நடாத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல்.

தேர்தல் ஆணைக்குழுவின் ஆணைப்படி,

சமன் ஸ்ரீ ரத்நாயக்க
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய.

2022 ஏப்ரல் 26